

டாம் டேட் மற்றும் ரைட் சகோதரர்கள் கதை



டாம் டேட் மற்றும் ரைட் சகோதரர்கள் கதை




ஆசிரியர் ஜார்ஜ் ஷியா

தமிழாக்கம் அனுமிதா

வரைப்படம்

டான் பொலோனெஸ்



அத்தியாயம் 1.

1900

கிட்டி ஹாக், வடக்கு கெரோலினா

ஒரு காலையில், மீன் பிடிக்க டாம் டேட் சென்றான். முதல் முதலில் அகப்பட்ட மீன் மிகவும் சிறியதாக இருக்கவே, அதை தண்ணீரில் எறிந்துவிட்டு மற்றுமொரு பெரிய மீனைப் பிடித்தான்.

“எனக்கும், என் அப்பாவிற்கும் ஒரு நாளுக்கு போதுமானது”, என்று தன்க்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

சமுத்திர கரையோரம் ஒரு கூடாரம் அருகே, டாம் இரு மனிதர்களைப் பார்த்தான். அவர்கள் என்ன தான் செய்கிறார்கள் என்ற ஆவலில் அவர்களை நெருங்கினான். அவர்களில்,“ஹெலோ” என்று கூறிய ஒருவர், ”ஒரு பெரிய மீனைப் பிடித்திருக்கிறாயே”, என்றார். நான் பிடித்த முதல் மீனைப் பார்த்திருக்க வேண்டுமே”, என்ற டாம், “ஓரு திமிங்கலம் மாதிரி அவ்வளவு பெரியதாக இருந்ததால், என்னால் அதை கடற்கரைக்குக் கூட இழுக்க முடியவில்லை” என்றான்”.



இருவரும் சிரித்தார்கள். அவர்களின் வினோதமான உடைகளைப் பார்த்து அவர்கள் கிட்டி ஹாக்கிலிருந்து வந்தவர்கள் இல்லை என்று டாம் புரிந்துக் கொண்டான்



“என் பெயர் ஓர்வில், ஓர்வில் ரைட்”, எனறு அதில் ஒருவர் சொன்னார். “என்னை நீ, ஓர்வ் என்றழைக்கலாம்” என்றார்.
“இவர் என் சகோதரன், வில்பர்” என்று அறிமுகப்படுத்தினார்.
“நான் டாம் டேட்” என்று கூறிவிட்டு, “இங்கு, கிட்டி ஹாக்கில் என்ன செய்கிறீர்கள் “ என்று வினவினான்.
“பறக்கும் இயந்திரம் செய்ய ஓஹாயோவில் இருந்து வந்தோம்”, வில் சொன்னார்.
அப்படியென்றால் என்ன”, டாம் கேட்டான்.
“நீயே பாரேன; இது காற்றில் பறக்கும்”, எனறார் வில்.
எப்படி காற்றில் பறக்கும்? டாம் கேட்டான்.
“காற்றாடியைப் பறக்கவைக்கும் காற்றே தான் இதையும் செய்கிறது”, வில் விளக்கினார்.
அதற்காகதான் நாங்கள் கிட்டி ஹாக் வந்தோம்.
அமெரிக்காவில் மிக வேகமாக காற்றடிக்கும் இடங்களில் இதுவும் ஒன்று.

“இங்குள்ள மென்மையான மண்ணும் இறங்கவதற்கு வசதியாக இருக்கிறது”. என்றும் வில் கூறினார்”.
"நான் இதில் சவாரி பண்ணலாமா?”, டாம் கேட்டான்.
“இதை இன்னும் கட்டி முடிக்கவில்லை; ஆனால், நீ பிறகு வந்தால் பார்க்கலாம்”, என்றார் வில்.
“சரி, கட்டாயம் வருகிறேன்”என்றான் டாம்.



தன்ன்னுடைய உறவினர்கள், நெட் மற்றும் லோராவைச் சந்திக்க சென்ற போது தான் காற்றில் பறப்பது போன்ற கற்பனையில் இருந்தான்.


இப்போது தான் ஒஹாயோவிலிருந்து வந்த இரு மனிதர்களைச் சந்தித்தேன். அவர்கள் பறவைகள் போல் ஆகாயத்தில் பறக்கப் போவதாக சொன்னார்கள்” என்று கூறினான்.

“ஓ, டாம்; நீ உன்னனுடைய அசட்டு-பிசட்டு கதைகளையே சொல்லிண்டிருக்காதே”, எனறாள் லோரா,

“இது உண்மைதான். அவர்கள் உருவாக்கிய பறக்கும் இயந்திரம் ஒன்றை எனக்குக் காண்பித்தார்கள்”. என்றான்.

“ பறக்கும் இயந்திரம் என்றெல்லாம் ஒன்றும் கிடையாது”, என்ற நெட், “எங்களை முட்டாள் ஆக்காதே”, என்றான்.

“கொஞ்சம் பொறு, நீயே உன் கண்ணால் பார்க்கப் போகிறாய்”. என்று டாம் பதிலளித்தான். நெட், லோரா இருவரும் சிரித்தார்கள். ஆனால் தான் சொல்வது ஊண்மை என்று டாம் புரிந்துக் கொண்டான்.



அத்தியாயம் இரண்டு

அடுத்த நாள்.

வில், ஒர்வ், இருவரையும் சந்திக்க டாம் போய்க் கொண்டிருக்கும் போது, ஆகயத்தில் ஏதோ பெரியதாகத் தென்பட்டது. அது தான் பறக்கும் இயந்திரம். அவன் கடற்கரையை நோக்கி ஓடினான்.

 வில், ஓர்வ் இருவரும் பறக்கும் இயந்திரத்தை ஒரு காற்றாடி போல் பறக்கவிட்டிருந்தார்கள். டாமுடைய அப்பா, சித்தப்பா இருவரும் அவர்களுக்கு உதவிக் கொண்டு இருந்தார்கள். இயந்திரம் கீழே வந்ததும், இதில் பறக்க முடியுமா என்று டாம் கேட்டான்.

“நான் ஒரெ ஒரு முறை தான் போயிருக்கேன்”. என்ற வில், “என்னையோ, ஒர்வ்யோ எடுத்துக் கொண்டு போவதற்கு வேண்டிய காற்று இன்று இந்த இயந்திரத்தில் இல்லை”, என்றும் கூறினார்

“நான் ரொம்ப கனம் இல்லையே அதனால் நான் இதில் போகலாமா?” என்று கேட்டான்”.

வில் அவனுடைய அப்பாவை நோக்கி, “நீங்கள் என்ன சொல்கிறீர்கள், டேட்”, என்று கேட்டார்.

அவனை நாங்கள் வெகு தூரம் போக விடமாட்டோம்”, என்றார் ஓர்வ்.

“அப்போ சரி, ஆனால் ஜாக்கிரதையாக இருங்கள்” என்று பதிலளித்தார்





டாம் கீழ் தளத்தில் சௌகரியமாக நேராக நின்றுக் கொண்டு கொண்டிருந்தான். பிறகு, வில், டாம்-ன் தந்தை இருவருமாக இயந்திரத்தைத் எடுத்துக் கொண்டு நேராக, காற்றோடு ஓடினார்கள். காற்று இயந்திரத்தை மேலே தூக்கிய உடனே அதை விட்டுவிட்டார்கள்.



அது அப்படியே மேல-மேல போய்க்கொண்டேயிருந்தது. டாம், கிட்டி ஹாக் மேலே, தூரத்தில் இருந்தான். அவன் இன்னும் உயர போய்க் கொண்டேயிருந்த போது . திடீரென்று, இயந்திரம் மேலும் கீழுமாக குலுங்கியது.

“அப்படியே பிடிச்சிக்கோ டாம்”, வில் கத்தினார். சித்தப்பா பில், மற்றும் வில் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்து இழுத்தார்கள். இயந்திரம் கீழே வர ஆரம்பித்தது. டாம் கண்ணை மூடிக்கொள்ள, இயந்திரம் தளர்ந்த மண்ணில் கீழே வழுக்கி விழுந்தது..

“உனக்கு ஒன்றும் ஆகவில்லையே?”, அப்பா கேட்டார். டாம் எழுந்து நின்ற போது கொஞ்சம் தடுமாற்றம் தெரிந்தது. “எனக்கு ஒன்றும் இல்லை:, என்றவன், “நான் மறுபடியும் போகிறேனே; அடுத்த தடவை இன்னும் உயரமாகக் கூட போவேன்” என்று சொனான். “இலலை, இன்றைக்கு இது போதும்” என்றார் அப்பா.





வீட்டிற்க்குத் திரும்பி போகும் போது டாம் வழியில் நெட், லோரா, இருவரையும் சந்தித்தான். “நான் பறக்கும் இயந்திரத்தில் பறந்து போனேனே!”, என்றவன் “ஆகாயத்தில் ரொம்ப உயரத்தில் இருந்தேன்”, என்று முடித்தான்.

லோரா, “கட்டு கதை சொல்வதை நிறுத்து”, என்றாள். “பறக்கும் இயந்திரங்கள் என்றெல்லாம் சொல்வது வெறும் முட்டாள்தனம்; தவிர, அப்படி மனிதர்கள் பறக்கமுடியும் என்றால், இறக்கைகளுடன் பிறந்திருப்பார்கள், என்று தன் அப்பா கூறுவதாக நெட் சொன்னான்.

“நீ நாளை, கடற்கரைக்கு வந்து பார்” என்ற டாம் “வில் மற்றும் ஓர்வ் உங்களை அதில் அழைத்துப் போவார்கள்”, என்றான்.



மறு நாள் லோரா, நெட் இருவரும் மதிய வேளையில் கடற்கரை சென்றார்கள். ஆனால், காற்றே இல்லை. இயந்திரம் அந்த மண்ணில் ஒரு பூச்சி மாதிரி இருந்தது. “நீ எப்போது பறக்கப் போகிறாய், டாம்?” – லோரா சிரித்துக் கொண்டே கேட்டாள். “என்னை பார்”. என்று சொன்ன நெட் லோராவுடன் பரிகாசத்துடன் கைகளைப் படபடவென்று ஆசைத்துக் கொண்டு சுற்றி வந்தான்”. “கொஞ்சம் பொறுத்திருங்கள், நீங்கள் பார்கத்தான் போகிறீர்கள்”, என்றான் டாம்.

இரு தினங்களுக்குப் பிறகு, வில் மறுபடியும் பறந்து போனார். பதினைந்து நொடிகள் அப்படியே ஆகாயத்தில் இருந்தார். பிறகு நானுறு அடிகள் தடையின்றி, சறுக்கி சென்றார். அதற்கு பிறகு, இருவரும் ஒஹாயோ திரும்பி போவதற்கு மூட்டை கட்ட ஆரம்பித்தார்கள்.

“நீங்கள் இங்கிருந்து திரும்பி போய்விடப் போகிறீர்களா?”, டாம் கேட்டான்.

“இல்லை”, என்ற வில் “இது ஒரு சிறந்த இயந்திரம், இதால் மேலும்-கீழும், இந்த பக்கம்-அந்த பக்கம் செல்ல முடியும். ஆனால் , நாங்கள் திரும்பி போய், ஆகாயத்தில் அதிக நேரம் இருக்கக்கூடிய இதை விட திறமை மிக்க ஒன்றை தாயார் செய்ய வேண்டும்”. எனறார், வில்.

அடுத்த கோடைகாலம், இங்கு வந்து செய்வோம்” என்றார், ஓர்வ்.

“உங்ளுக்கு உதவ நான் இங்கு இருப்பேன்”, என்றான் டாம்.




அத்தியாயம் 3
1901

வில், ஓர்வ் இருவரும் அடுத்த கோடையில் ஒரு புதிய இயந்திரத்துடன் திரும்பி வந்தார்கள். இது பழையதைவிட இரு மடங்கு இருந்தது.

“இதுவரை கட்டினதில் இது தான் மிகப் பெரிய மிதவூர்தி(க்ளைடர்)”, என்றார் வில். ‘முன்பு கொண்டு வந்ததை விட இதன் இறக்கைகள் அதிக நீளமாகவும், வளைந்தும் இருக்கின்றன; இந்த இறக்கைகளால் நாங்ள் அதிக நேரம் மேலே இருக்க முடியும் என்று நம்புகிறோம்”. என்றார் வில்.
அவர் முதலில் மேலே பறந்தார். சில நொடிகள், தடையில்லாமல் சுலபமாக சறுக்கி சென்றார்.

ஆனால், திடீரென்று இயந்திரம் சுற்றி-சுழன்று, வேகமாக கீழே விழ ஆரம்பித்தத்து.



"அப்படியே இரு”, ஓர்வ் கூவினார். இயந்திரம் வேகமாக வந்து தரையில் மோதியது.


“உங்களுக்கு அடிபடவில்லையே?”, என்று டாம் வில்லிடம் கேட்டான். அவர் கண் காயம்பட்டு கன்னி போயிருந்தது; மூக்கில் இரத்தம் தோய்ந்து இரத்தக் களரியாக இருந்தது. ஆனால், மற்றபடி வேறெங்கும் மோசமாக அடிபடவில்லை. வில், மற்றும் ஓர்வ் இயந்திரத்தைப் பழுது பார்க்க வேண்டிருந்தது; அதனால் டாம் உடைய அப்பாவை உதவிக்கு அழைத்தார்கள். சில நாட்களில் அது மறுபடியும் பறக்க முடியும்; ஆனால், ஏதோ ஒன்று இன்னும் தடங்கல் செய்தது. அவ்வப்போது, திடீரென்று நின்றுவிட்டு, தரையை நோக்கி சுழன்று வரும்.



“எது சரியாக இல்லை?”, டாம் கேட்டான்.

“எங்களுக்குப் புரியவில்லயே”, ஓர் சொன்னார்.

“அவர்களுக்கு பிரச்சனை என்னவென்று தெரியாமல் இருக்கலாம்”, என்ற அப்பா, “ஆனால், நீ அதில் சவாரி செய்வதில் எனக்கு விருப்பம் இல்லை; அது ஆபத்தானது.” என்று டாமிடம் சொன்னார்.



வில் மற்றும் ஓர்வ் பல விதமான முயற்சிகள் செய்தனர்; ஆனால் ஏதோ சிக்கல் இருந்துக் கொண்டேயிருந்தது. இறுதியாக, அவர்கள் ஓஹாயோ திரும்புவது என்று முடிவு செய்தனர்.

"நீங்கள் கைவிட்டு விடவில்லையே?", டாம் கேட்டான்.





“மனிதர்கள் இன்னும் ஆயிரம் வருடங்களுக்குப் பறக்க முடியும் என்று எனக்கு தோண்றவில்லை”, என்றார் வில்., ஓர்வ், வில் இருவரும் கடற்கரையை விட்டு நடந்து போவதை டாம் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்களை இனி தான் பார்ப்போம் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை.

அத்தியாயம் 4

1902

அந்த வருடம் குளிர்காலம், நிதானமாக முடிந்தது. ஒரு நாள் ஓர்வ் இடமிருந்து டாமிற்குக் கடிதம் வந்தது.

“வேறுமாதிரியான இறக்கைகளுடன் ஒரு புதிய இயந்திரம் நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம்” என்று கடிதம் ஆரம்பித்து, “இறக்கைகள் இன்னும் நீளமாகவும், குறுகலாவும் உள்ளன. சமனநிலையும் சிறந்த திருப்பங்களும் ஏற்படுத்த ஒரு வாலை நாங்கள் சேர்த்துள்ளோம். அதை பரீஷை செய்ய கிட்டி ஹாக் திரும்பி வருகிறோம்”, என்று எழுதியிருந்தது.

செப்டம்பர் மாதம் வில், ஓர்வ் இருவரும் திரும்பி வந்தார்கள். அவர்களுக்கு உதவ, இந்த முறையும், டாம் தந்தைக்கு ஒரு வேலை கொடுத்தார்கள்.

புதிய இயந்திரம், பழையதை விட விருத்தியடைந்திருந்தது. வில், ஓர்வ் இருவரும் கிட்டதட்ட ஆயிரம் முறைகள் பறந்து போனார்கள்.



“இந்த இயந்திரம் தான் எங்களுக்கு வேண்டும்”. “எங்களால் இதை கட்டுப்படுத்த முடியும். வேண்டிய போது மேலே போகும்., அதே மாதிரி, எங்களுக்கு தேவையான போது கீழேயும் வரும்”

:தவிர, உங்கள் விருப்பப்படி இது திரும்பும்”, என்றான் டாம்.

“ஆனால் இந்த இயந்திரத்தால் ஒன்று முடியாது; அது பலத்த காற்றில்லாமல் பறக்காது”.என்றார் வில்.

“இதற்குள் நாங்கள் ஒரு இயந்திரத்தை வைப்போம்; பிறகு இது தானே பறக்கும்; இதுவரை யாருமே செய்யாத ஒன்றை நாங்கள் செய்து காண்பிப்போம். நிஜமாகவே நாங்கள் பறந்து போவோம்”

அந்த குளிகாலம், ஒஹாயோவில், ஓர்வ், வில், இருவரும் சேர்ந்து இந்த இயந்திரத்தை காற்றூடே தள்ளுவதற்கு, ஒரு பொறியையும், சுழல்விசிறியையும் உருவாக்கினார்கள்.

ஆனால், அது வேலை செய்யுமா? அதை கண்டுபிடிப்பதற்கு அவர்கள் கிட்டி ஹாக் திரும்பி போகவேண்டும்.



அத்தியாயம் 5

1903


வில், ஓர்வ் இருவரும் புதிய இயந்திரத்துடன் கிட்டிஹாக் திரும்பி வந்தார்கள். ஆனால் இப்பொது புரொபல்லர்களுடன் பிரச்சினைகைள் இருந்தன. ஓர்வ், புதிய ஒன்றை உருவாக்க ஓஹாயோ திரும்ப வேண்டியிருந்தது.


அவர் திரும்பி வந்தபோது, பலத்த காற்றுடன் கூடிய புயல்கள் இருந்ததால் பறப்பதோ ஆபத்து.

“ஒரு பயங்கரமான் புயலுக்குப் பிறகு, டாமுடைய தந்தை “இந்த பருவநிலையில் பறப்பது இயலாது. அவர்கள் இருவரும் சீக்கிரமே நிறுத்தாவிடில், யாராவது காயமடைவார்கள், டாம், அது நீயாக இருப்பதை நான் விரும்பவில்லை. இந்த முகாமிலிருந்து நீ அகன்றுவிடு”, என்றார்.

“ஆனால் அப்பா! வில், ஓர்வ் இருவரும் என்னுடைய சிநேகிதர்கள்”, என்றான் டாம்.

“இது மிக அபாயமானது”, என்றார் அப்பா. வில், ஓர் இருவர்களுக்காகவும் டாம் ஏங்கினான்; அவர்களின் இயந்திரத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். சீதோஷ்ண நிலை இன்னும் போசமாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் பறக்க முயன்றால், என்ன ஆகுமோ, என்று கவலைப் பட்டான்.





அவனுடைய அப்பா தூங்கியதும், டாம் வீட்டைவிட்டு கடற்கரையை நோக்கி சென்றான்.

வில் - ஓர்வின் முகாம் அருகில் இருந்த உயிர் காக்கும் நிலையத்திலிருந்து மீட்பு குழுவினர் வந்திருப்பதை அவன் கவனித்தான். பொதுவாக, புயல்களில் மாலுமிகளைக் காப்பாற்றும் பொறுப்பு இவர்களுடையது. வில், ஓர்வ், இருவருக்கும் எதாவது பிரச்சனையோ?

டிஸம்பர் 17-ந் தேதி காலையில் மிகவும் குளிராக இருந்தது. டாம் வீட்டில் காற்று பேயாக வீசி, ஊளையிட்டுக் கொண்டிருந்தது; அவன் வீட்டு சன்னல் கதவுகளும் ஆடின.

இந்த காற்றில் அவர்கள் பறக்க முயன்றால் அது பைட்தியகாரத்தனம் என்ற டாமின் அப்பா “நான் திரும்ப தூங்க போகிறேன்”, என்றார்.



இரு சகோதரர்களையும் டாம் பார்த்துவிட்டான்.

இனறு நாங்கள் பறப்பதற்கு முயற்சிக்கப் போகிறோம்; இந்த குழுவினர் எங்களுக்கு உதவ வந்திருக்கிறார்கள்”, என்றார் ஓர்வ்.

அந்த குழுவினர்கள் இயந்திரத்தை எடுத்து ஒரு நீண்ட மர பாதையில் வைக்க டாம் உதவினான்.



எல்லாம் தயாராக இருந்தது, ஆனால் காற்று இன்னமும் சப்தத்துடன் பயங்கரமாக வீசிக்கொண்டிருந்தது.

“ஓர்வ், அவ்வளவுதான்”, வில் கூறினார்.

சகோதரர்கள், இருவரும் மீண்டும் சந்திபோமோ என்ற ஐயத்தில், நீண்ட நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டேயிருந்தனர்., பின்னர் ஓர்வ் இயந்திரத்தில் ஏறினார்

"நல்வாழ்த்துக்கள் ஓர்வ்!”, கத்தினான் டாம்.



அத்யாயம் 6

அதே நாள்

ஓர்வ் பறக்க ஆரம்பித்ததும், எல்லோரும் மூச்சு கூட விடாமல் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.




காற்றின் தாக்கம் இன்னும் மோசமாகிக் கொண்டிருந்த சமயத்தில் தான் ஓர்வ் கிளம்பப் போகிறார்.



இயந்திரம் தண்டவாளத்தில் உருள ஆரம்பித்தது. காற்றை எதிர்த்து முதலில் மெதுவாக, மிக மெதுவாகவே சென்றது .

திடீரென டாம் அப்பாவின் குரலைக் கேட்டான் . “டாம், இங்கு நீ என்ன செய்கிறாய்?’ “அப்பா, இங்கு பாரேன்”, டாம் கூவினான்.






அப்போதுதான் இயந்திரம் தரையிலிருந்து மேலே கிளம்பிக் கொண்டிருந்தது. ஒரு ஸ்திரம் இல்லாத பறவை போல் , காற்றில் மேலும்-கீழுமாக ஏறி, இறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் இயந்திரம் பறந்துக் கொண்டிருந்தது

டாமின் அப்பா உள்பட, யாவரும் இந்த சரித்திர புகழ் பெறற கணத்தை வெகு உற்சாகமாக ஆரவாரம் செய்துக் கொண்டிருந்தார்கள்.
என்ன அற்புதம்!”, என்று சொல்லி அவர் “இவர்கள் வெற்றி அடைவார்கள் என்று நான் நினைக்கவே இல்லை”, என்று கூறினார்.

இந்த இயந்திரம் பதிரெண்டு நொடிகள், நூற்றிருபது அடிகள் தான் மேலே சென்றது. ஆனால் அதுவே மிகப் பெரிய சாதனை. சரித்திரத்திலேயே முதல் முறை, மனிதர்களால் கட்டுபடுத்தப்பட்டு தன் சக்தியினாலேயே பறந்திருக்கிறது.
அன்று காலை, வில், ஒர்வ் இருவரும் இன்னும் மூன்று முறைகள் பயணம் செய்து முடித்ததும் யாவரும் கிட்டி ஹாக்கிற்குச் சென்றார்கள்..





வில், ஓர்வ் இருவரின் கைகளை யாவரும் குலுக்கி "அவர்கள் வென்று விட்டார்கள்", என்று ஆரவாரம் செய்தார்கள்.

அங்கிருந்த லோரா, நெட் இருவரும் "இது உண்மையில் நடந்ததா", என்று கேட்டார்கள். நிச்சியமாக இது நடந்தது", டாம் சொன்னான். "வில் மற்றும் ஓர்வ் பறப்பார்கள் என்று நான் தான் உங்களிடம் முன்பே சொன்னேனே."

"நாங்கள் பறந்தோம்; டாம் எங்களுக்கு உதவினான்", என்றார் வில்.

நீங்கள் மறுபடியும் எப்போது பறப்பீர்கள்', லோரா கேட்டாள்.

நாங்கள் இருவரும் கிறிஸ்துமஸுக்கு வீட்டிற்குப் போகிறோம். ஆனால் திரும்பி வருவோம்", என்றார் ஓர்வ்.

அவர்கள் திரும்பி வரும் போது, அந்த இயந்திரத்தை என்னை பறக்க விடுவார்கள்!" என்றான் டாம். "நான் சந்திர லோகம் வரை பறப்பேன்."

"கட்டுக்கதை சொல்வதை நிறுத்தவே மாட்டாயா, டாம்?", லோரா கேட்டாள்.

"யாரும், எப்பொதும், சந்திரலோகம் போகவே முடியாது", என்றான் நெட்.

"அவசரப்படாதே; நீ பார்க்கத்தான் போகிறாய்!", என்றான் டாம். "

முற்றும்

